முருகப்பெருமான் துணை

**மகான் நந்தனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.03.2024**, வெள்ளிக்கிழமை

1. குருபரா குன்றமர்ந்த வேலா
குமரா ஞானத் தலைவா
ஆறுமுகா அப்பனே உமை போற்றி
அவதாரம் நீ கலியுகம் தன்னில்
2. தன்னிலே அரங்க மகானாக
தவசியாக தருமராசனாக வந்து
மண்ணுலகில் அற்புதம் நிகழ்த்த
மார்க்கமுடன் உன் பெருமை கூறி
3. கூறியே சோபகிருது சால் திங்கள்
குறைவிலா இருபானை திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 25 ம் நாள், 08.03.2024, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் நந்தனார் யானும்
துல்லிய ஆசிதனை உலகநலம் பெற
4. நலம்பெற அரங்கனாக முருகன்
ஞானமாக சன்மார்க்கம் தனை
பலம் பெற மக்களிடை விதைத்து
பசிபிணி விரட்டும் அருமருந்தை
5. அருமருந்தை அமுதாக வழங்கி
அண்ணலாய் காட்சி தர
வருமுலகில் உலகோர் தேடி
வாஞ்சையுடன் அரங்கமகானின்
6. மகானின் மலர்பதம் பற்றி
மாண்புற நல்ல பண்புற வேண்டி
வகையான வழிகாட்டல் தாயென
வணங்கி தீட்சை ஆசிபெற
7. ஆசிபெற முன்பிறவி வழியான
ஆணவ ஆசாபாச மலங்கள்
ஆசியால் அகன்றோடி சடுதி
அடிபணியும் தெளிவு திடமும் கூடி

8. கூடியே இயல்பு எளிமை நிலை
குருவருளின் மகிமை நிழல் பெருமை
நாடியே அமைதி பாதுகாப்பு
ஞானவாழ்வின் ரகசியம் விளங்கி

9. விளங்கி தொடருகின்ற பிறப்பினை
விட்டகலும் வழிமுறை தேடி
களங்கமற தயவு நெறிபடவே
கண்ணியமான வாழ்க்கை முறை

10. முறையாகக் கடைபிடித்து நன்கு
முழுமை தரும் தரும வழிகளுள்
நிறைவாக இறங்கி மகிழ்ந்து
நித்தநித்தம் அன்ன சேவை

11. சேவை ஆற்றி உலகம் தனில்
சீடனென அரங்கமகானிடம்
அவனியில் அடையாளம் கொண்டுவிட
ஆவரப்பா அனைவரும் ஞானிகளாக
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–